இருக்கிறார்கள். இது தவிர பொது சுகாதார துறையைச் சேர்ந்த ஊழியர்கள் பூச்சிக் கொல்லி மருந்து தெளிப்பதில் ஈடுபட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட கிராமங்களையும் தீவிரமாகக் கண்காணித்து வருகிறார்கள்.

திரு. அ. செல்லப்பா : பேரவைத் தலைவரவர்களே, பதநீர் அருந்தியதால் பாதிக்கப்பட்டது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், நான் கேட்கவிரும்புவது, பதநீர் என்று கருதி அந்த 32 பேரும் அருந்தி இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் மது அருந்தி இருக்கிறார்கள் என்று இவர்கள் மீதே வழக்கு போட்டிருக்கிறார்கள். இந்த அரசுக்குப் பாதிக்கப்பட்டவர்கள் மீது வழக்கு போடுவதுதான் கொள்கையா ? பாதிக்கப்பட்டவர்கள்மீது வழக்கு போடுவதைக் கைவிடுவதுடன் இந்த வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென மாண்புமிகு அமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல் தகவல் என்னிடத்திலே இல்லை. பதநீர் விற்றதாகவும், பதநீர் குடித்ததாகவும் மருத்துவர்களும் காவல் துறையினரும் அறிக்கை அனுப்பி இருக்கிறார்கள். அப்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல் இருக்குமானால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

[பிற்பகல் 12–40].

(ஓ) சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ் எஸ். ஜே. சாதிக் பாட்சா, நல்லதம்பி ஆகியோர் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் ; திரு. ஜே. ஜேம்ஸ்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றி எழுந்துள்ள பதட்ட நிலையை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தர ராஜன் : தலைவர் அவர்களே மருத்துவக் கல்லூரி இயக்குநரிடமிருந்து வந்துள்ள அறிக்கையின்படி சென்னை நகரிலுள்ள அரசு மருத்துவமனை

களில் மர்மமான காய்ச்சலுடன் ஒருவரும் அனுமதிக்கப்படவில்லை என்று தெரிகிறது. இம் மருத்துவமனைகளில் டைபாய்டு, வைரஸ், காய்ச்சல், மலேரியா நோய்களுக்காக அனுமதிக்கப்பட்டோரின் விவரம் கீழ் வருமாறு :—

(1) அரசினர் பொது மருத்துவமனை, சென்னை. — விஷ ஜுரம் எதுவுமில்லை. விஷ ஜுரம் பரவவுமில்லை.

(2) அரசினர் இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை. — ..

விவரம்.	பாதிக்கப்பட்டோர். (ஜனவரி, 1979). எண்ணிக்கை.	பாதிக்கப்பட்டோர். (ஜனவரி, 1979). இறப்பு.	பாதிக்கப்பட்டோர். (டிசம்பர் 1978). எண்ணிக்கை.	பாதிக்கப்பட்டோர். (டிசம்பர் 1978). இறப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
(1) காரணம் கண்டு பிடிக்க இயலாத காய்ச்சல்.	33	..	35	..
(2) டைபாய்டு காய்ச்சல்	116	2	72	1
(3) ‘‘ வைரஸ் ’’ காய்ச்சல்.	87	..	44	..
(4) மலேரியா காய்ச்சல்	1	..	3	..

(3) குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலையம். — விஷ ஜுரத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கையில் எந்த வித ஏற்றமும் இல்லை. ஆயினும் நெருக்கடி நிலைமையினை சமாளிப்பதற்கு வேண்டிய மருத்துவ வசதிகள் இங்குள்ளன.

(4) அரசினர் ஸ்டான்லி மருத்துவமனை. — விஷ ஜுரம் பரவுகின்றது என்பதற்கு எந்தவித ஆதார பூர்வமான குறிப்பேடும் இம்மருத்துவ மனையில் இல்லை.

	அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.		இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை.	
	சனவரி.	பிப்ரவரி.	சனவரி.	பிப்ரவரி.
(5) அரசினர் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை : தொத்து நோய்.				
இன்பேக்டிவ் ஹேபடிடிஸ்	24	24	..	..
டைபாய்டு	64	39	1	..

இதிலிருந்து பதட்ட நிலைமை ஏற்படக்கூடிய அளவுக்கு சென்னை நகரில் எந்தவிதமான மர்மக்காய்ச்சலும் பரவவில்லை என்பது தெளிவாகும். குறிப்பாக குளிர்காலம் கழிந்து கோடை காலம் வரும்போது பருவநிலையில் ஏற்படும் மாறுதல் காரணமாக சிலர் பாதிக்கப்படுவதற்கு எப்பொழுதும் வாய்ப்புண்டு. ஆயினும், சென்னை நகரில் அத்தகைய நோய் பெருமளவில் பரவினாலும், அந்த நிலைமையை சந்திக்க சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகள் எப்பொழுதும் தயார் நிலையிலுள்ளது என்றும், அரசு வேண்டிய நடவடிக்கைகளை எவ்வித தயக்கமுமின்றி எடுத்து மக்கள் நலம் காக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

*திரு. தீ. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் சென்னை நகரில் பரவியுள்ள மர்மமான காய்ச்சல் பற்றிய பதட்ட நிலைக்கு பதில் சொல்லும்போது, அப்படிப்பட்ட மர்மமான நோய் எதுவுமே இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். கடந்த நாட்களில், தலைவர் அனுமதித்தால் தினமணி பேப்பரில் இருந்து சில..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்தான் பதில் சொல்லிவிட்டாரே, அதைப்பற்றி அடிஷனலாக கேள்வி இருந்தால் கேட்கவும்—அந்த பழைய விஷயங்களை திரும்பவும் வேண்டாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவர் அவர்களே, என்னுடைய வட்டத்திலே கடந்த 6 ஆம் தேதியன்று ஷண்முகம் என்பவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு 14-ம் தேதியன்று ஓட்டேரி சுடுகாட்டுக்கு அனுப்பப்பட்டார், அதுபோல் எனக்குத் தெரிந்த

9 79 மார்ச் 17] [திரு. தீ. சு. நல்லதம்பி]

ஒருவர் புதிதாக திருமணம் ஆனவர், காய்ச்சல் என்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர் 4 நாட்களில் இவ்வுலகத்தை விட்டு விட்டு வேறு உலகத்துக்கு சென்று விட்டார். இப்படி சென்னை நகரில் உள்ளவர்கள் இந்தப் புது மர்ம நோயினால், நான் கந்து நாட்களில் இவ்வுலக வாழ்க்கையை விட்டு வேறு உலகத்துற்கு சென்று கொண்டிருக்கின்றனர். இது பற்றி மருத்துவ துறை அதிகாரி ஒருவர் பேட்டி கொடுத்திருக்கிறார். அதுதான் பேப்பரில் தினமணியில் வந்திருக்கிறது என்று சொன்னேன். அந்த நோயைப் பற்றி மருத்துவத்துறை அதிகாரிகள் இது சமீபத்தில் பெய்த புயல், வெள்ளத்தாலும், மழையாலும், குடி தண்ணீர் கழிவு நீருடன் கலந்து போய்விட்டதாலும் ஏற்படுகிறது. இதைப்பற்றி எவ்வளவு எடுத்துச் சொன்னபோதிலும் நகராட்சிகள் இதை கவனிப்பதில்லை என்று சொல்லியிருக்கிறார். ஆனால், நமது அமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட மர்ம நோயே இல்லை என்று கூறுகிறார். இனிமேலாவது அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சிருச்சி அர். சௌந்திரராஜன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவ மனையில் இறந்த இரண்டு பேரின் எண்ணிக்கையைக் காட்டி, ஒரு பதட்ட நிலை உருவாகி இருக்கிறது என்று சொன்னார்கள். நானே படித்துக் காட்டிய நேரத்தில் மருத்துவ மனையில் இறந்தவர்கள் எண்ணிக்கையைச் சுட்டிக் காட்டியிருக்கிறேன். மர்மக் காய்ச்சலால் யாரும் இறக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறேன். மர்மக் காய்ச்சல் பரவவில்லை என்றுதான் அறிக்கையிலும் படித்துக் காட்டினேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(9). அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. அர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது.

---

*1979ம் ஆண்டு மார்ச் திங்கள் 7ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றது